Tax Ombudsman

# எங்களை எவ்வாறு தொடர்பு கொள்வது

**taxombudsman.gov.au**

**1300 44 88 29**
(உள்ளூர் அழைப்புக் கட்டணம்)

**enquiries@taxombudsman.gov.au**

**GPO Box 551, Sydney NSW 2001**

**இலவச** மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்புச் சேவைகளுக்கு, **131 450** என்ற எண்ணை அழைத்து **1300 44 88 29** என்ற எண்ணைக் கேளுங்கள்.

நீங்கள் காது கேளாதவர் கேட்கும் திறன் குறைவானவர் அல்லது பேசுவதில் அல்லது தொடர்பு கொள்வதில் சிரமம் உள்ளவர் என்றால், உதவிக்கு **accesshub.gov.au** என்ற வலைத்தளத்தைப் பாருங்கள்.



# வரி பற்றிய புகாரா?

ஆஸ்திரேலியாவின் வரி மற்றும் ஓய்வூதியம் அளிக்கும் முறைகளை நியாயமானதாகச் செய்ய நாங்கள் உதவுகிறோம்.

ஆஸ்திரேலிய வரிவிதிப்பு அலுவலகம் (ATO) மற்றும் வரி தொழில்முறையாளர்கள் வாரியம் (TPB) பற்றிய புகார்களை நாங்கள் ஆராய்ந்து அவற்றைத் தீர்க்க உதவுகிறோம்.

Tamil | தமிழ்

Tax Ombudsman



## ஒரு புகார் அளிப்பது எப்படி

நாங்கள் உங்களுக்கு உதவுவதற்கு முன்பே நீங்கள் ATO அல்லது TPB-யிடம் புகார் செய்திருக்க வேண்டும்.

ஒரு புகார் அளிக்க, **taxombudsman.gov.au** ஐப் பார்வையிட்டு "**புகாரைப் பதிவு செய்**" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

உங்கள் புகாரை உறுதிப்படுத்தவும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து உங்களுடன் பேசவும் ஒரு விசாரணை அதிகாரி 2 வேலை நாட்களுக்குள் உங்களைத் தொடர்புகொள்வார்.

## நாங்கள் உங்களுக்கு எப்படி உதவ முடியும்

ATO அல்லது TPB உங்களை நியாயமற்ற முறையில் அல்லது நேர்மையற்ற முறையில் நடத்தியதாக நீங்கள் நம்பினால் எங்களைத் தொடர்பு கொள்ளலாம். பின்வருபவை தொடர்பான புகார்களுக்கு எங்களால் உதவ முடியும்:

- வரியைத் திரும்பப் பெறுதல் அல்லது பணம் செலுத்துவதில் தாமதம்
- மோசமான சேவை அல்லது நியாயமற்ற நடத்துமுறை
- வரிக் கடன்கள் அல்லது கடன் வசூல்
- பணம் செலுத்தும் திட்டம் அல்லது வட்டிக் கட்டணங்கள்
- நிதி நெருக்கடி ஏற்பாடுகள்
- விடுபட்ட ஓய்வூதிய உத்தரவாதக் கொடுப்பனவுகள்
- நிறுவன வரிக் கடன்கள் அல்லது இயக்குநர் அபராத அறிவிப்புகள்.

எங்கள் சேவை இலவசம் மற்றும் சுயாதீனமானது.

எங்களால் உதவ முடியுமா என்று உங்களுக்குத் தெரியாவிட்டால், தயவுசெய்து எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் பிரச்சினை எங்கள் பணி வரம்புக்கு வெளியே இருந்தால், உதவிக்கு உங்களை சரியான நிறுவனத்திற்கு வழிநடத்த முயற்சிப்போம்.

உங்கள் வரி விவர அறிக்கை அல்லது நீங்கள் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்பது குறித்து எங்களால் ஆலோசனை வழங்க முடியாது.